**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS.No. 144/2018**

| | | | |
|---|---|---|---|
| | | DEPOSITION OF WITNESS | PW.1 |
| NAME | KANTHI | TALUK | |
| HUSBAND NAME | GUNASEKARAN | RELIGION | |
| AGE | 53 | CASTE | |
| VILLAGE | BANGALORE | OCCUPATION | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 11.08.2025.

**பிரதிவாதிகள் 10, முதல் 13 தரப்பில் குறுக்கு விசாரணை :-**

1. நான் தற்போது பெங்களூரில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கை எதற்காக யார் மீது போட்டுள்ளேன் என்றால் எனக்கு பாகம் கொடுக்காததால் எனது அண்ணன் விவேகானந்தன் மீது போட்டுள்ளேன். விவேகானந்தன் மீது மட்டும் போட்டுள்ளேனா என்றால் இல்லை, எனது அம்மா லலிதா, சுஜாதா மற்றும் நாராயணன் மீது போட்டுள்ளேன்.

2. இதுவரை எனது குடும்பத்தில் பாகம் ஏற்படவில்லையா என்றால் இன்னும் ஏற்படவில்லை. எனது குடும்பத்தில் ஏற்கனவே பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது குடும்பத்தில் 2002ஆம் ஆண்டு பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றாலும் அதில் நானும் தரப்பினர் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினையில் சி அட்டவணை சொத்து எனக்கு ஒதுக்கியுள்ளார்கள் என்றால் சரிதான், சொன்னார்கள் ஆனால் கொடுக்கவில்லை.

3. ஏற்கனவே எனது குடும்பத்தில் பிதுராஜ்ஜிய சொத்து குறித்து பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றாலும் ஆனால் எனது அண்ணன் விவேகானந்தன் என்பவருக்கு ஆதரவாக பாகப்பிரிவினை ஏற்படவில்லை என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா ஏ அட்டவணை சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் 32 அல்லது 37 என நினைக்கிறேன்.

4. ஏ அட்டவணை சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் தெரியாது. அந்த சொத்திற்கு செக்குபந்தி தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் எனது பிரமாண வாக்குமூலத்திலுள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். பி அட்டவணை சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் 32 அல்லது 37 என தெரியவில்லை. அந்த சொத்தின்

அளவு தெரியுமா என்றால் தெரியாது. அதற்கு செக்குபந்தி தெரியுமா என்றால் தெரியாது.

5. தாவா பி அட்டவணை சொத்தானது 2002 பாகப்பிரிவினையில் எனது அண்ணன் விவேகானந்தனுக்கு பாகமாக போனது என்றால் சரிதான். விவேகானந்தனுக்கு பாகமாக பிரிந்த சொத்தை அவர் ராஜேஸ்வரிக்கு விற்றார் என்றால் சரிதான். மேற்படி ராஜேஸ்வரி 10ஆம் பிரதிவாதி ரவிவண்ணனின் மனைவி என்றால் சரிதான். ராஜேஸ்வரி எனது அண்ணனிடம் சொத்தை வாங்கி அனுபவித்து இறந்தபிறகு அவரது வாரிசுகள் சொத்தை அனுபவிக்கிறார்கள் என்றால் சரிதான்.

6. அதனால் தாவா பி அட்டவணை சொத்தில் நான் பாகம் கேட்பது சரியல்ல என்றால் சரிதான். தாவா ஏ அட்டவணை சொத்து விஸ்தீரணம் எனக்கு தெரியாது என்றாலும் அந்த ஏ அட்டவணை சொத்தை ஏற்கனவே பாகப்பிரிவினையில் பாகம் பிரித்துவிட்டார்கள் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை ஆவணத்தை ஏற்றுக்கொண்டு நான் கையொப்பம் செய்தேன் என்றால் அந்த ஆவணத்தில் விவசாய கடனுக்காக என்று சொல்லி ஒரே ஒரு பேப்பரில் பெங்களூரில் வைத்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள்.

7. பாகப்பிரிவினை ஆவணத்தை குடியாத்தத்தில் பதிவு செய்தபோது நான் வந்து கையெழுத்து போட்டேன் என்றால் நான் வரவில்லை. பாகப்பிரிவினை மூலம் எனக்கு பாகமான சொத்தை எனக்கு கொடுத்துவிட்டார்களா என்றால் இல்லை. எனக்கு பாகப்பிரிவினை ஆவணத்தில் சொத்து கொடுத்தார்களா அல்லது சொத்திற்கு ஈடாக பணம் கொடுத்தார்களா என்றால் இரண்டும் கொடுக்கவில்லை.

8. அந்த பாகப்பிரிவினையில் சொத்திற்கு ஈடாக எனக்கு 20,000/– பணம் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. சொத்திற்கு ஈடாக 20,000/– பணம் வாங்கிக்கொண்டு தற்போது பணம் வாங்கவில்லை என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு அந்த பாகப்பிரிவினையில் சொத்தும் கொடுக்கவில்லை பணமும் கொடுக்கவில்லை என சொல்கின்ற நிலையில் அந்த பாகப்பிரிவினையை எதிர்த்து எனது குடும்பத்தார் மீது ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை.

9. நான் அந்த பாகப்பிரிவினையை ஏற்றுக்கொண்டு எனது பங்கிற்கு ஈடாக ரூ.20,000/–த்தை வாங்கி கொண்டதால் தான் அந்த பாகப்பிரிவினையை எதிர்த்து நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை கோரி தாவா தாக்கல் செய்துள்ள நிலையில் 2002 பாகப்பிரிவினையில் எனக்கு பாகம் கொடுக்கவில்லை என சொல்கின்ற

நிலையிலும் மேற்படி 2002 பாகப்பிரிவினையில் உள்ள சொத்துக்களை இந்த தாவாவில் கொண்டு வந்துள்ளேனா என்றால் கொண்டு வந்துள்ளேன்.

10. எனது குடும்பத்திற்கு மொத்தம் எத்தனை ஏக்கர் பாத்தியப்பட்டது என்றால் தெரியாது. தாவாவில் எவ்வளவு பாகம் கேட்டுள்ளேன் என்றால் 4ல் ஒரு பாகம் கேட்டுள்ளேன். எனது அண்ணன் விவேகானந்தன் ராஜேஸ்வரி மீது வழக்கு போட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். ராஜேஸ்வரி எனது அண்ணன் விவேகானந்தன் மீது வழக்கு போட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

11. எனது அண்ணன் விவேகானந்தன் தூண்டி தான் ராஜேஸ்வரி மற்றும் அவரது வாரிசுகள் மீது வழக்கை போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எனது குடும்பத்தாருடன் சேர்த்து ராஜேஸ்வரி குடும்பத்தாரையும் தரப்பினராக போட்டுள்ளேன் என்றால் சரிதான். ராஜேஸ்வரிக்கு சொந்தமான சொத்தை இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. ராஜேஸ்வரிக்கு பாத்தியப்பட்ட சொத்தில் நான் பாகம் கேட்க முடியாது என்றால் சரிதான்.

12. அதனால் ராஜேஸ்வரி எனது அண்ணனிடம் வாங்கிய கிரைய ஆவணங்கள் செல்லும் என்றால் சரிதான். ஏற்கனவே எங்கள் குடும்பத்தில் பாகம் ஏற்பட்டது என்றாலும் அதில் சொத்துக்கு பதிலாக நான் 20,000/– பணம் வாங்கினேன் என்றாலும் எனது அண்ணன் விவேகானந்தனின் தூண்டுதலின் பேரில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது குடும்பத்தின் இதர சொத்துக்களையும் இந்த தாவாவில் சேர்த்துள்ளதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

13. எனது குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட அனைத்து சொத்துக்களும் பிதுராஜ்ஜிய சொத்துக்கள் என்றால் சரிதான். ஏற்கனவே பாகப்பிரிவினை எங்கள் குடும்பத்தில் ஏற்பட்டதால் மீண்டும் பாகப்பிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்தது செல்லாது என்றால் சரியல்ல, என் பாகம் கேட்டு வழக்கு போட்டுள்ளேன். நான் ஏற்கனவே நடந்த பாகப்பிரிவினை ஆவணத்தை ரத்து செய்துவிட்டு தான் பாகப்பிரிவினை கேட்க முடியும் என்றால் சரியல்ல.

14. நான் தாக்கல் செய்த நிலைக்கத்தக்கதல்ல அது தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH
Digitally signed by K KARTHICK ASATH
Date: 2025.08.11 17:26:36 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.